புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS March 2025
ISSN: 2456-821X

# 20. TML1159 - சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வீரச்சாதனம்

திவ்விகா மோகன்ராஜ்,
முனைவர் பட்ட ஆய்வாளர், பரதநாட்டியம், இசைத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613010

## தொடக்கமாக

சிலம்பில், இளங்கோவடிகள் முக்கிய பெண் பாத்திரங்களாக கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி போன்றோரை சித்தரிக்கின்றார். கண்ணகி என்பவள் தன்னுடைய கணவனிற்காக வாழ்பவளாகவும், மாதவி என்பவள் கணிகையர் குளத்தில் பிறந்தாலும் குல வழக்குப்படி வாழ விரும்பாதவளாகவும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்தை சமுதாயத்திற்கு உணர்த்தியவளாகவும், கோப்பெருந்தேவி என்பவள் நீதியை நிலைநாட்ட பாண்டிய மன்னன் இறந்ததால், கணவன் மேல் கொண்ட அளவுகடந்த அன்பால் தனிமையில் வாழ இயலாதவளாய் தன் உயிரை துறக்கின்றாள். எனினும் பாரோர் போற்றும் பத்தினி கண்ணகி ஆனவள், புகார் நகரில் மிக்க செல்வ வளம் மிக்க குடும்பத்தில் பிறந்து மட்டுமல்லாமல் மிகச்சிறந்த பெருங்குணங்களை உடையவள். இவள் திருமகளை போன்ற அழகும் உடையவள். கோவலனை மணந்து சில ஆண்டுகள் மகிழ்ச்சியாக இல்லறத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது கோவலன் மாதவியிடம் சென்றுவிட்டதால், பல ஆண்டுகள் அவன் வருகைக்காக பொறுமையுடன் எதிர்ப்பார்த்திருந்தாள். இவளுடைய தோழியான தேவந்தி, இழந்த கணவனை மீண்டும் பெறுவதற்காக சடங்கு முறையில் வழிபாடு ஒன்றை செய்ய அழைக்கின்றாள். அதனை கண்ணகி, பீடு என்று கூறி அதனை மறுத்த் மட்டுமல்லாமல் தன் கணவன் என் மேல் கொண்ட அன்பில் வர வேண்டுமே தவிர வழிபாட்டு சடங்குகள் மூலமாக வரவழைப்பது நற்செயல் ஆகாது என்று கூறுகின்றாள். இதிலிருந்து பொறுமை தளராத உறுதியுடன் கணவன் மேல் கொண்ட நம்பிக்கை மற்றும் கண்ணகியின் ஆளுமை வெளிப்படுகிறது.

## கண்ணகியின் குடும்பப் பண்பு

பிரிந்து சென்ற கோவலன் மறுபடியும் கண்ணகியிடம் திரும்பி வந்து தன் செய்த தவறுகளை உணர்ந்து பேசுகின்றான். வறுமை தன்னை பார்த்து நகைப்பதாக அவன் கூறுகிறான். அதனைக் கேட்டதுடன் தன் காலில் அணிந்திருந்த சிலம்புகளை கண்ணகி கோவலனிடம் கொடுக்கிறாள். இன்முகம் காட்டி கணவனிற்கு ஆறுதல் கூறி தன்னுடைய விலையுயர்ந்த பொருளை கணவனுக்காக கொடுக்கும் குடும்பப் பாங்கான பெண்ணின் அன்பு இங்கு காட்டப்படுகின்றது. தன் கணவன் கோவலனோடு பாண்டியநாடு சென்ற பொழுது, நீதிக்கு மாறாக கணவன் கொலை செய்யப்பட்டதை அறிந்தவுடன், தன் கணவன் கள்வன் அல்ல என்பதை பாண்டிய மன்னனிடம் முறையிட்டு அதனை நிரூபித்து நீதியை நிலைநாட்டியதுடன் பாண்டிய மன்னன் தன்னுடைய தவறை உணர்ந்து அழிவதற்கு காரணமாகிறாள். மேலும் கண்ணகி தனியாகவே நின்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட பழியை எதிர்த்து போராடி தகர்த்தெறிகிறாள். அவள் ஒரு பொறுமையான மனைவி, துணிவான போராளி, மற்றும் நீதிக்காகப் போராடும் தெய்வீகப் பெண் என்றே கூறலாம். "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்ற உண்மையை கண்ணகியின் ஊடாக உணரச் செய்கிறார் இளங்கோவடிகள்.

## கண்ணகியின் பொறுமையின் வீரம்

கண்ணகி தனது கணவன் கோவலனுடன் வாழ்ந்த போது, அவள் ஒரு சாந்த ரஸம் பொருந்திய மனைவியாகவே இருந்தாள். மேலும் கோவலன் மாதவியுடன் தவறான வாழ்க்கை நடத்திய போதும், கண்ணகி அவனைப் பிரிந்து செல்லாமல் பொறுமையுடன் அவன் வருகைக்காக காத்திருந்தாள். இது அவளுடைய உள்ளார்ந்த வலிமையைக் காட்டுகிறது.

"நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச் சிலம்புள கொண்மெனஞ்."

(காணாத்திறம் உரைத்த காதை. 72–73)

*கணவன் பிழைகள் செய்திருந்தாலும் அவனை சினக்காமல் தன்னுடைய திருமுகத்தில் முருகலுடன் கோவலனைப் பார்த்து "சிலம்புகள் உள்ளனவே அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றால் கண்ணகி. மேலும்,*

"...போற்றா ஒழுக்கம் புரிந்தீர்..." (கொலைக்களக் காதை. 81)

*என்று பொறுமையுடன் கண்ணகி கோவலனிடம் கூறுகின்றாள். இங்கு கோவலன் செய்தவை பாராட்ட தகாத விடயம் என்று கூறுவதன் மூலம் இவளுடைய பொறுமையின் வீரம் வெளிப்படுகிறது.*

**கண்ணகியின் துணிவின் வீரம்**

*"சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்ற பயில் மொழி இங்கு மெய்ப்பிக்கப்படுகின்றது. கோவலன் மதுரையில் கொல்லப்பட்ட போது, கண்ணகி தனது துணிவை வெளிப்படுத்தினாள். அவள் தனது கணவனின் மரணத்துக்குக் காரணமானவர்களை எதிர்கொள்ள மதுரை சென்றாள். இங்கு மன்னிடம் மன்றாடாமல் நேருக்கு நேர் பேசியது என்பது ஒரு பெண்ணின் துணிவையும், தன்னம்பிக்கையையும் காட்டுகிறது. அரசன் நெடுஞ்செழியனை எதிர்கொண்டு, தன்னுடைய கணவனிற்கு துணிவுடன் நீதி கேட்டு நின்றாள். "தோரா மன்னா செப்புவதுடையேன்" உண்மை தெரியாத மன்னனே சொல்லுகின்றேன் கேள் என்ற அறச் சீற்றத்துடன் அரசன் முன் நின்று, "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" என்று விளித்த போதே ஒன்று புலனாகின்றது. கொலை களத்திற்கு முன்பிருந்த கண்ணகி வேறு பின்பு இருந்த கண்ணகி வேறு என்பதை அறிய முடிகின்றது.*

"யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையுமென்...." (வஞ்சின மாலை. 36–37)

*இங்கு நான் பத்தினி பெண் என்பது உண்மையானால் அரசியல் பிழைத்த இந்த மண்ணையும் அரசரையும் என் கற்பினால் பொசுக்குவேன் என்று துணிவுடன் சூளுரைக்கிறாள். அதுமட்டுமன்றி என் கணவனுக்கு உண்டான அநீதியால் இம் மண்ணை சினந்தேன், என் மீது தவறில்லை என்று துணிவுடன் ஆணை இடுகின்றாள் கண்ணகி. அவனுடைய அவையில் அவனை நோக்கி எதிர்க் குரல் வீசிய முதலாவது பெண்ணாகவும், முதன்மைத்துவம் வாய்ந்த பெண்ணாகவும், கண்ணகியை காண முடிகிறது. நாணம் கொண்டவள், அச்சமும் மடமும் நீங்கிய பெண்ணாக மதுரை மன்னனிடம் தேரா மன்னா என் கணவன் கள்வனா என்று நிலை கேட்டு துணிந்து வாதாடுதல் மற்றும் வேற்று நாட்டின் மக்களிடமும், மன்னனிடமும் எதிர் குரல் வாயிலாக தன் துணிச்சலான வீரச் சினத்தை காட்டும் புரட்சிகரமான பெண்ணாக கண்ணகி உருவாவதற்கு மதுரை மண் காரணமாயிற்று எனலாம். இதிலிருந்து இவளுடைய நீதிக்கான போராட்டம் தொடங்குகின்றது.*

**கண்ணகியின் நீதிக்கான போர்**

*கண்ணகியின் வீரம் என்பது பழிவாங்கும் வீரம் அல்ல, மாறாக நீதியை நிலைநாட்டும் வீரமாகும். மதுரை அரசன் கோவலனின் மரணத்துக்கு உரிய நீதியை வழங்காதபோது, கண்ணகி தனது நீதிக்கான கோபத்துடன் ரௌத்திர ரஸத்துடன் ஒரு மார்பகத்தைக் கிழித்து, மதுரை நகரைச் சபித்தாள். இவளது இந்தச் சாபம் மதுரைக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியது. இது ஒரு பெண்ணின் உணர்ச்சி மற்றும் நீதிக்கான போராட்டத்தின் சின்னமாகும்.*

"மாயங்கொல்மற்றென் கொல் மருட்டியதோர் தெய்வம் கொல்
போயங்கு நாடுகேன்? பொருள் உரையோ இதுவென்று...
தீவேந்தன் தன்னைக் கண்டு இத்திறம் கேட்பல் யான் என்றாள்" (ஊர் சூழ்வரி. 68–69)

*ஆதாவது, பழிகார பாண்டிய மன்னனிடம் சென்று அவன் செய்த நீதியற்ற கொலைக்குக் காரணம் கேட்பேன் என்று சபதம் செய்கிறாள். இதிலிருந்து மன்னனிடமே நேரடியாக சென்று நீதி கேட்கும் ஒரு சாதாரணப் பெண்ணிற்கு ஏற்பட்ட அநீதிக்கான போராட்டமாகும். அதுமட்டுமன்றி,*

"பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன் கள்வனோ..." (துன்பமாலை. 50–51)

*கதிரவனைப் பார்த்து கண்ணகி கோபத் தனலுடன், "பரந்த அலைகளை உடைய கடலினை வேலையாக உடைய கதிரவனே சொல்!, இவ்வுலகின் கண் நிகழ்வுகின்ற நிகழ்வுகளை எல்லாம் நீ அறிவாயே, கள்வனோ என் கணவன்?" என்று கேட்கின்றாள், உலகையே இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வருபவனும், உயிர்கள் அனைத்தும் இவ் உலகில் வாழ்வதிற்கு வழி காட்டுபவனிடமே, தன்னடைய நானம் தங்கிய குரலினை விடுத்து வீரச் சினம் பொங்கும் குரலினால் குமிறியபடி நீதியைக் கேட்கின்றாள் கண்ணகி. மேலும்*

"பெண்டிரும் உண்டுகொல்..........
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவாளில் தப்பிய மன்னன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்" ( ஊர் சூழ்வரி. 51–59 )

*தன்னுடைய நீதிக்கு விடை கேட்கின்றாள். இது போன்ற அநீதியை தாங்கிக் கொள்ளும் பெண்களும் உள்ளனரா? சான்றோரும் உள்ளனரா? அறம் தவறிய மன்னவனின் கூடல் நகரில் நீதி காக்கும் தெய்வமும் உள்ளதோ? என்று கேள்விகள் அம்புகள் போல் தொடுக்கின்றாள் கண்ணகி. அதுமட்டுமன்றி*

"தீவேந்தன் தன்னைக்கண்டித்
திறங் கேட்பல் யானென்றாள்" ( ஊர் சூழ்வரி. 71)

*அங்கு உள்ளவரிடமே வீரச் சினத்துடன், இத்தகைய நீதிக்கு எதிரான அநீதியை செய்த இந் நாட்டு வேந்தனைக் கண்டு இதற்கான காரணத்தை யானே கேட்பேன் என்றாள். இதிலிருந்து அநீதிக்கான அழிவை ஒரு சாதரணப் பெண்ணான கண்ணகி விதைத்துவிடுகின்றாள். "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" எனும் கூற்றிற்கினங்க, நன்மை உண்டாகுவதும் பெண்ணாலே, தீமை என்ற ஒன்று அழிவதும் பெண்ணாலே என்பது இங்க மெய்ப்பிக்கப்படுகிறது.*

**தெய்வீகப் பாத்திரம்**

*கண்ணகியின் வீரம், அவளை ஒரு தெய்வமாக உயர்த்தியது. தனியொருத்தியாக அவள் தனது கணவனுக்காகப் போராடியதோடு மட்டுமல்லாமல், சமூகத்தில் நீதியையும், நேர்மையையும் நிலைநாட்ட முயன்றாள். இதனால்தான் அவள் "பத்தினித் தெய்வம்" என்று போற்றப்படுகிறாள்.*

"அவளுந்தான்
போதில் ஆர் திருவினாள் புகழ்உடை வடிவு என்றும்
தீது இலா வடமீன் திறம் இவள் திறம் என்றும்
மாதரார் தொழுது ஏத்த வயங்கிய
பெருங்குணத்துக் காதலாள்"

*இங்கு கண்ணகியானவள் தெய்வத்தோடு ஒப்பிடப்படுகின்றாள். மேலும் மூன்று நிலைகளில் அவளது குணச்சித்திரங்கள் சித்தரித்துக் காட்டப்படுகின்றன. வேட்டுவ வரியிலும் சாலினி என்பவள் "உலகிற்கு ஓங்கிய திருமாமணி" என்று கூறுவதன் மூலமாகவும் இவள் தெய்வீகமானவள் என்பது மூலமாகவும், கவுந்தி அடிகள் "கற்புடைத் தெய்வம்" என்று மாதிரிக்கு அறிமுகம் செய்வதன் மூலமாகவும், வேலனை வழிபட்ட குன்றக் குறவர்கள்,*

"இவள் போலும் நங் குலக்கு ஓர்
இருந் தெய்வம் இல்லை"

*என்று கண்ணகியை தெய்வமாக கொள்கின்றனர். மதுரையில் கண்ணகியானவள் கோவலனது இறப்பை தாங்க முடியாது அழும் போது, அவளைக் கண்ட மதுரை மக்கள் "புதிய தெய்வம்" என்று கூறுவதையும் காணலாம்.*

"செம்பொற் சிலம்பு ஒன்று கையேந்திய நம் பொருட்டால்
வம்பப் பெரு தெய்வம் வந்தது இதுவென் கொல்" (ஊர் சூழ்வரி. 23–24)

*என்று அவளுடைய தெய்வத் தன்மையை இளங்கோவடிகள் சுட்டிக்காட்டுகிறார்.*

"யார் பிழைப்பா ரீங்கென்னப்ஞ்ஞ்ஞ்" (வஞ்சின மாலை. 52)

*என்று கண்ணகியிடம் தீக் கடவுள் வினாவும் பொழுது, கண்ணகியானவள் தெய்வ உள்ளத்தோடு தாய்மை உணர்வு பொருந்தியவளாக கூறுகின்றாள் "அறவோர், பசு, பத்தினிப் பெண்கள், முதுமையாளர், குழந்தைகள், போன்றோரை கைவிட்டு, தீய தன்மை உடையவர் பக்கமே சேர்க" என்று சினம் கொண்டு தீக்கடவுளை சினத்துடன் ஏவினாள். இங்க தீக் கடவுளே அவள் வார்த்தைகளை செவிமெடுக்கும் அளவிற்கு அவள் பத்தினி தெய்வமாக அக்கணமே உலகிற்கு மெய்ப்பித்துக் காட்டிவிட்டாள். அதேவேளை மதுரையை எரிபற்றும் போது நால்வகை வர்ண பூதங்களும் நகரை விட்டு விலகிப் போய்விட்டார்கள். இதனை,*

"ஏவல் தெய்வத்து எரிமுகம் திறந்தது
காவல் தெய்வம் கடைமுகம் அடைத்தன" (அழற்படு காதை. 1–2)

*என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அன்று தேவர்களை காப்பாற்றுவதிற்கு, அநீதியை அழித்து நீதியை நிலை நாட்டுவதிற்கு அவதரித்த காளி தேவதை போன்று இவ் உலகிலும் பெண்ணொருத்தி*

வந்து விட்டாள் என்று நான்கு வருண தெய்வங்களுமே அவ் ஊரை விட்டு அகன்று போய்விட்டனர். அத்தகைய தன்னுடைய கற்பினால் தெய்வீகமான பெண்ணாக உருமாறினாள் கண்ணகி.

இந்தியாவில் தமிழ் நாடு, கேரளா மட்டுமல்லாமல் ஈழத்திலும் கண்ணகி வழிபாடு காணப்படுகின்றது. ஈழத்தின் வடக்கு பகுதியான யாழ்ப்பாண குடா நாடு, வன்னிப் பெருநில பரப்பிலும், கிழக்குப் பகுதியான மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற பகுதிகளிலும், மேலும் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளிலும் கண்ணகி வழிபாடு பெரும் விமர்சையாக நிலவி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் கண்ணகி அம்மன் கோயில்களில் வைகாசி பொங்கல் மேலும் சிறப்பு பெற்றதாகவும் காணப்படுகின்றது. இவ்வாறு கண்ணகியை பத்தினி தெய்வமாகவும் காளி தெய்வத்தின் மறு உருவமாகவும் பாவித்து வணங்கப்படுகிறது.

**சமூகத்திற்கான செய்தி**

கண்ணகியின் கதை சமூகத்திற்கு பல முக்கியமான செய்திகளை வழங்குகிறது என்றே கூறலாம். நீதி கிடைக்காதபோது இச் சமூகம் அழியும் என்றும், பெண்கள் மண வலிமை கொண்டவர்கள் அத்துடன் துணிவுடன் நீதிக்காகப் போராடும் திறமை கொண்டவர்களாகவும், அநீதியை எதிர்கொள்வது ஒவ்வொருவரின் கடமை ஆகும் என்பது இக் கதையின் சாராம்சம் என்றே கூறலாம்.

மக்களிற்கு நீதிநெறி புகட்டவே இயற்றப்பட்ட இராமாயணம் உள்ளிட்ட இதிகாசங்கள், உலக இலக்கியங்கள் என எவற்றிலுமே கண்ணகி போன்ற ஒரு பெண் பாத்திரம் காணக் கிடைக்கவில்லை என்றே கூறலாம். அதுமட்டுமன்றி தனி மனித வாழ்க்கையில் ஆண், பெண் ஒழுக்கத்தை வலியுறுத்துகிறது. மேலும் நாட்டின் ஆட்சியாளர் மக்கள் நலனில் மனம் செலுத்த வேண்டும் என்றும், மீறி தவறினால் ஒழுக்கம் சிதைந்தால் அழிவைச் சந்திக்க நேரிடும் என்பதை கண்ணகி எனும் பெண் பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் தெளிவாக சமூகத்திற்கான செய்தியை சித்தரித்துக் காட்டுகின்றார்.

**முடிவுரை**

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் சமணத் துறவி ஆயினும் அரச குடும்பத்தில் பிறந்தவர். பெண்களுக்கு பெருமை சேர்க்கும் விதமாக எழுந்த காப்பியமே சிலப்பதிகாரம் ஆகும். இங்கு கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி இம் மூவரையும் முக்கிய கதாபாத்திரங்களாக வடிவமைத்துள்ளார். இங்கு கண்ணகி கணவனுக்கு கட்டுப்பட்டு பேசா மடந்தையாக வாழ்பவள், கணவன் பிரிவால் இல்லற கடமை ஆற்ற முடியாததை நினைத்து வருந்துபவளாகவும் கணவனின் மகிழ்ச்சியை தவிர தன்னை பற்றி எள்ளளவும் சிந்திக்காதவளாகவும் கண்ணகியை அடையாளப்படுத்துகிறார். கண்ணகியின் வீரம் என்பது ஒரு பெண்ணின் உள்ளார்ந்த வலிமை, துணிவு மற்றும் நீதிக்கான பற்றைக் காட்டுகிறது. அவள் ஒரு மனைவியாக, ஒரு போராளியாக, மற்றும் ஒரு தெய்வீகப் பெண்ணாக இக் காவியத்திலே திகழ்கிறாள். இதுவே இவளுடைய வீரச் சாதனமாகும். இறுதியாக சிலப்பதிகாரம் எமக்கு கண்ணகியின் வீரத்தை மட்டுமல்ல, நீதி, தியாகம் மற்றும் சமூக மாற்றத்தின் செய்திகளையும் நமக்கு வழங்கிச் செல்கிறது.

**துணை நூற்பட்டியல்**

1. முனைவர்.தே.நாகலெட்சுமி, சிலப்பதிகாரத்தில் பெண்கள், பாண்டியன் மகளிர் ஆய்வுக் கோவை, தொகுதி 5, 2025
2. புலியூர் கேசிகன், சிலப்பதிகார தெளிவுரை, 2020
3. ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், 3ம் பதிப்பு2008
4. சாமி. சிதம்பரனார், சிலப்பத்காரத் தமிழகம், 2008
5. முனைவர். இராம.குருநாதன், ப.முத்துக்குமார சுவாமி, சிலப்பதிகார ஆய்வுக் கோவை
6. முனைவர். இரா.சந்திர சேகரன், ப.சரவணன், சிலப்பதிகாரத்தில் மெய்ப்பாடுகள், 2007
7. முனைவர். அ.அறிவுநம்பி, சிலம்பின் எதிர்க் குரல், 2005
8. டாக்டர்.ரா. சீனிவாசன், சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும், 1998
9. ஆ.ரா.இந்திரா, சிலம்பு உரைநடைச்சித்திரம், 1995
10. வே. சாமிநாதையர், சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், 1920